# ஸ்ரீ வைஸ்வாநரக்னி பிராயச்சித்த ஹோமம்

ஸ்ரீ மகாலக்ஷ்மி கடாட்சம் அவைருக்கும் வேண்டும். இந்த கடாட்சத்தால் சுப, சௌக்கிய, சௌகரிய, சௌபாக்கியம், தீர்க்க ஆயுள், ஆரோக்கியம் நிச்சயமாகக் கிடைக்கும். இந்த கடாட்சத்தை பூஜைகள், அபிஷேகங்கள், அர்ச்சனைகள், சகஸ்ரநாமம், ஹோமங்கள் மூலம் பெறலாம். இதேபோல் அனைத்து தெய்வங்களின் அனுக்கிரஹத்தையும் இந்த வழிகளின் மூலம் பெறலாம்.

இந்த மேலே குறிப்பிட்ட வழிகளின் மூலம் நாம் புண்ணிய பலன்ளை விருத்தி செய்து கொள்ளலாம். அதாவது, அதிகரித்துக் கொள்ளலாம்.

அதே சமயம் நமக்குத் தெரிந்தோ, தெரியாமலோ ஏற்பட்ட பாபங்கள், சாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள், பிதுர் சாபங்கள், நம்முடைய புண்ணிய பலன்களை அடைய விடாமல் தடுக்கும். அதாவது இந்த தெய்வங்கள் கொடுக்கும் கடாட்சத்தை பெற முடியாதவாறு இடையூறாக நிற்கும். இதனால் நாம் நினைத்து செய்ய இருந்த சுபகாரியங்களுக்கு தடையாகவும் இருக்கும்.

மேலும், வாழ்க்கையில் ஏற்படுகின்ற முன்னேற்றத்திற்கும் தடையாக நிற்கும். மேலும், வாழ்க்கையில் பலவிதமான கஷ்டங்களையும். நஷ்டங்களையும், துக்கங்களையும் கொடுக்கும்.

இந்த பாபங்கள், சாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள் அனைத்தையும் நாம் நிவர்த்தி செய்து கொண்டால்தான், புண்ணிய பலன்களையும், தெய்வ கடாட்சத்தையும் பெற முடியும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுபகாரிய தடை இருக்காது. கஷ்டங்கள் நஷ்டங்கள் குறையும்.

கிருஷ்ண யஜுர் வேதத்தில் இந்த மேற்சொன்ன பாப, சாபங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்காக இந்த பிராயச்சித்த ஹோமம் கூறப்பட்டுள்ளது.

இதை நாம் மூன்று சமயங்களில் செய்து கொள்ளலாம்.

1. ஒரு குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறுவதற்கு முன்னால்
2. எப்பொழுதும் எல்லாம் நாம் தெரியாமலோ அல்லது தெரிந்தோ பாபங்கள் செய்து விட்டோம் அல்லது சாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள் நமக்கு சேர்ந்துவிட்டது என்று நினைக்கும் போதெல்லாம்.
3. தெடர்ச்சியாக சுப காரிய தடங்கல்கள் ஏற்பட்டுக்கொண்டு இருக்கும் போதெல்லாம்.

## இந்த ஹோமங்கள் செய்து கொள்வதினால் ஏற்படும் பலன்கள் :

1. தெரிந்தோ, தெரியாமலோ ஏற்பட்ட பாபங்கள், தோஷங்கள், சாபங்கள், திருஷ்டிகள் நிவர்த்தியாகும்.
2. இதை தொடர்ச்சியாக மாதா மாதம் செய்து கொண்டால், நம்முடைய பாப சுமைகளை நிவர்த்தி செய்து கொண்டு, புண்ணிய பலன்களை அபிவிருத்தி செய்து கொள்ள உதவும்.
3. நமக்கு தெய்வ கடாட்சம் கிடைக்க தடையில்லாமல் இருக்கும். நமக்கு எல்லா பாக்கியங்களும் சேரும்.

நாம் தினமும் குளிக்கிறோம். உடல் சுத்தம் ஏற்படுகின்றது. நாம் தினமும் துணிகளை சுத்தம் செய்து கொள்கிறோம். துணிகள் சுத்தம் ஆகின்றன. ஆனால், மீண்டும் உடலும், துணிகளும் அழுக்கு ஆகத்தான் செய்யும். மீண்டும் மீண்டும் குளிக்கத்தான் வேண்டும். துணிகளை சுத்தம் செய்துதான் ஆக வேண்டும்.

அதேபோல் நாம் நம்முடைய ஆத்மாவையும், தொடர்ச்சியாக சுத்தம் செய்து கொண்டு தான் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நமக்கு ஏற்பட்ட பாபங்கள், சாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

மேலும், நம்முடைய புண்ணியங்களும், பாபங்களும் நம்முடன் ஜன்மாந்திரம் வரும். மேலும் நம்முடைய சந்ததிக்கும் தொடர்ச்சியாக போய்ச் சேரும்.

அதாவது, இந்த புண்ணியங்களும், பாபங்களும் நம்முடைய அடுத்து அடுத்து வரும் நம்முடைய ஜன்மங்களுக்கும் தெடர்ச்சியாக வந்து கொண்டே இருக்கும். எவ்வளவுக்கெவ்வளவு பாப சுமைகளை நாம் நிவர்த்தி செய்து கொள்கிறோமோ அவ்வளவு சீக்கிரம் நம் ஆத்மாவிற்கு மோட்சம் கிட்டும். அதனால், நமக்கு அதிர்ஷடமாக கிடைத்த இந்தப் பிறவியிலேயே, நாம் இந்த பாபச்சுமைகளையும், இதுவரை கூடி இருக்கின்ற ஜன்மாந்திர பாபங்களையும், அதாவது இந்த பிறவிக்கு முன்னால் ஏற்பட்ட அனைத்து பாபங்களையும், நாம் இந்தப் பிறவியிலேயே நிவர்த்தி செய்து கொள்வது முக்கியம். காரணம், அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்ற ஔவையார் சொன்னதுபோல், இந்தப் பிறவியிலேயே நம் ஜன்மாந்திர பாபங்களை குறைத்துக் கொள்ள, நிவர்த்தி செய்து கொள்ள, ஆண்டவன் நமக்கு அளித்த நல்ல வாய்ப்பு.

மேலும், நாம் செய்த புண்ணியப் பலனும், பாபச்சுமையும் நம்முடைய சந்ததிகளுக்கும் போய் சேரும். அதாவது, மகன், பேரன், கொள்ளு பேரன், எள்ளு பேரன் என்று பாபச்சுமைதொடர்ச்சியாக போய் கொண்டே இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். பெற்றோர்கள் செய்த பாபம், பிள்ளைகளை போய் சேரும் என்ற பழமொழி அனைவருக்கும் தெரிந்ததே.

*அதனால், நமக்கு கிடைத்த இந்த அதிர்ஷடமான பிறவியில், எல்லா பாபச் சுமைகளையும் நிவர்த்தி செய்து கொள்ள தவறக் கூடாது.*

*மேலும், வைஸ்வாநரக்னி பிராயச்சித்த ஹோமத்தில் என்ன என்ன பாப சுமைகள் குறையும் என்று தாங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சுருக்கமாக பிற்பகுதியில் கொடுத்து உள்ளோம். இதை படிக்கும்பொழுது இந்த ஹோமம் எவ்வளவு முக்கியமானது என்று உங்களுக்குப் புரியும்.*

**மேலும் சில விளக்கங்களை தெரிந்து கொள்வது நல்லது.**

*1. பாபச் சுமைகள் அதிகமாக இருக்கும் என்று தோன்றினாலும், சுபகாரியத் தடைகள் அதிகம் இருந்தாலும், வாழ்க்கையில் முன்னேற்றமேஏற்படாமல் இருந்தாலும், எவ்வளவு புண்ணிய பலன்கள் சேர்ந்தாலும் மேன்மைபெற முடியாமல் இருக்கும்பொழுதும், வம்ச விருத்தி தடைபடும் போல் இருக்கும் என்று தெரியும் பொழுதும், குழந்தைகளே பிறக்கவில்லை என்ற நிலை இருக்கும் பொழுதும், எப்பொழுதும் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் பொழுதும், கடன் தொல்லைகளால் அவதி படும்பொழுதும், எதிரிகளால் கடுமையாக பாதிக்கப்படும் பொழுதும், இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பவர்கள் இந்த ஹோமங்களில் மாதா மாதம் கலந்து கொள்வது மிகவும் நல்லது.*

*2. பித்ரு கடன்களான ஸ்ரார்த்தம் (அல்லது திவசம் அல்லது திதி) தர்ப்பணங்கள் முறையாக செய்யாதவர்கள் இந்த ஹோமங்களில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.*

*3. குல தெய்வ பூஜைகளையும், குடும்பங்களில் தொடர்ச்சியாக செய்து வந்த கட்டளைகளையும் சரியாக செய்யாதவர்கள் இந்த ஹோமங்களில் மாதாமாதம் தொடர்ச்சியாக கலந்து கொண்டு வந்தால், இவைகளை சரியாக செய்ய பல சந்தர்ப்பங்கள் கூடிவரும்.*

*4. மேலும், பொதுவாக கீழேக் கொடுக்கப்பட்ட வகையைச் சார்ந்தவர்களும், இந்த ஹோமத்தில் சேர்ந்து கொண்டால், குடும்ப சுபீட்ச அபிவிருத்திக்கு வழி வகுக்கும்.*

*1. வியாபாரிகள்*

*2. தொழில் அதிபர்கள்*

*3. பெரிய உத்யோகத்தில் இருப்பவர்கள்*

*4. செல்வந்தர்கள்*

*5. வெளிநாடு சென்று வந்தவர்கள்*

*6. வெளி நாட்டில் இருப்பவர்கள்*

*7. சஷ்டி அப்த பூர்த்தி சாந்தி (அதாவது 60 வயது முடிவில் செய்து கொள்ள வேண்டிய சாந்தி) முறையாக செய்து கொள்ளாத ஆண்கள், பெண்கள் அனைவரும் இந்த ஹோமங்கள் செய்து கொண்டால் இந்த சாப, பாப நிவர்த்திகள் ஏற்படும்.*

*இதற்கு காரணம் என்னவென்றால் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் இரண்டு உதாரணங்களை கீழே கொடுக்கிறோம்.*

*1. இந்த நிமிடம் கூட உங்களையும் என்னையும் வாழ்த்திக் கொண்டு இருப்பவர்களும் இருப்பார்கள். நம்மைதிட்டிக் கொண்டு இருப்பவர்களும் இருப்பார்கள். நம்மைதிட்டுதல் நமக்குச் சாபமாகவும், பாபமாகவும் அமையும். இதை நாம் தவிர்க்க முடியாது. அதனால், நாம் வேறு இடத்தில்தான் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும்.*

*2. நாம், நம்மிடம் கீழே வேலை செய்பவர்களிடம் சற்று கோபமாக பேசுகிறோம். அவர்கள் நம்மைமனதிற்குள் திட்டி விடுகிறார்கள்.*

*அதுவும் சாபம்தான். நாம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் பிராயச்சித்தம் செய்து அந்த சாபங்களில் இருந்து விடுபடலாம்.*

*மேலும், ஸ்ரீ மகாலக்ஷ்மி கடாட்சம் கிடைக்க வேண்டும் என்றால் இந்த நிவர்த்திகளை கட்டாயமாக செய்து கொள்ள வேண்டும்.*

*இந்த ஸ்ரீ மகாலக்ஷ்மி யோக பீடத்தின் நோக்கமேஉங்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மி கடாட்சத்தால் சுப, சௌக்கிய, சௌகர்ய, சௌபாக்கியம், தீர்க்க ஆயுள், ஆரோக்கியம் கிடைக்க வேண்டும் என்பதே. அதற்கு இந்த பிராயச்சித்த ஹோமம் செய்து கொண்டால் தான் நல்லது.*

*இதற்கு மற்றும் ஒரு சரியான உதாரணம் சொல்கிறோம். இந்த ஹோமதாத்ப்பரியத்தை சுலபமாக புரிந்து கொள்ள முடியும்.*

*உங்களுக்கு மாவட்ட கலெக்டரிடம் ஒரு சர்டிபிகேட் தேவைப்படுகிறது. அந்த கலெக்டர் உங்களுடைய பால்ய நண்பர். உங்களுக்காக எதையும் செய்வார். அவரிடம் இருந்து இந்த சர்டிபிகேட் வாங்க நாம் இரண்டு முறையில் அணுகலாம்.*

*1. முறைப்படி அந்த சர்டிபிகேட் வாங்க,* Village Administrative Officer, Revenue Inspector, Tasildhar*களிடம், வாங்க வேண்டிய கையெழுத்துக்களை வாங்கிக்கொண்டு, கடைசியாக கையெழுத்துப் போடக் கூடிய கலெக்டரிடம் முறைப்படி ஆபிஸ் மூலம் அனுப்பி விட்டு, அவரை நேரில் சந்தித்து, இந்த சர்டிபிகேட்டில் கையெழுத்து போட்டு சீக்கிரம் கொடுக்கவும் என்று கேட்டுக் கொண்டால், அவர் இரட்டிப்பு சந்தோஷத்துடன் உடனடியாக கையெழுத்துப் போட்டுக் கொடுப்பார். காரணம், அவர் கீழ் உள்ள அதிகாரிகள் மூலம் முறைப்படி அது வந்திருக்கிறது. அதனால், அவர் சுலபமாக இந்த சர்டிபிகேட்டில் கையெழுத்துப் போட முடியும்.*

*2. நாம் நேரடியாக ஒரு விண்ணப்பத்துடன், நம்முடைய பால்ய நண்பரான* District Collector*யைப் பார்த்து இதை தயார் செய்து கொடுக்க வேண்டும் என்று அவரிடமேநேரில் கொடுத்தால், அவர் என்ன பதில் சொல்வார் என்றால் இந்த விண்ணப்பம் சரிதான், ஒரு மாதம் பொறுங்கள், இந்த விண்ணப்பத்தை* VAO, RI, Tasildhar *போன்றவர்களிடம் அனுப்பி சரிபார்த்து இந்த சர்டிபிகேட் உங்களுக்குத் தருகின்றேன் என்று சொல்வார். என்னதான் பால்ய நண்பராக இருந்தாலும், சட்ட முறை என்று இருக்கிறதல்லவா?*

*இந்த இரண்டு முறைகளில் முதலில் சொன்ன முறைதான் புத்திசாலித்தனமான முறை.*

**காரணங்கள் :**

*1. நாம் முறைப்படி செய்து இருக்கின்றோம் என்று கலெக்டர் நினைப்பார்.*

*2. நம்முடைய வேலைதான்* VAO, RI, Tasildhar *இடம் கையெழுத்து வாங்க வேண்டியது. நல்ல முறையும், சுலபமும் கூட.*

*3. மேலும், கலெக்டரின் வேலையை நாம் சுலபப்படுத்தி விடுகின்றோம். அவரும் சந்தோஷம் அடைந்து, மேலும், நல்ல பல நன்மைகளை நமக்கு அவர் செய்ய நினைப்பார்.*

*இந்த உதாரணத்தைப் போல் தான் நாமும்.*

**ஸ்ரீ மகாலக்ஷ்மி கடாட்சத்தைப் பெற, நமக்கு ஏற்பட்ட சாபங்கள், பாபங்கள், திருஷ்டிகள், தோஷங்களை நிவர்த்தி செய்து கொண்டு ஸ்ரீ மகாலக்ஷ்மியை அணுகினால், ஸ்ரீ மகாலக்ஷ்மியும் சந்தோஷமடைந்து, உடனடியாக நமக்கு அவருடைய பரிபூரண கிருபா கடாட்சத்தை அருள்வாள். இதில் எந்தவிதமான சந்தேகங்களுக்கும் இடமில்லை.**

*அதனால்தான்,* **தாங்கள் அனைவரும் நிச்சயமாக இந்த ஹோமத்தில் பங்கு பெற்று ஸ்ரீ மகாலக்ஷ்மியின் கடாட்சத்தைப் பெற வேண்டும் என்று வேண்டுகிறோம்.**

*மேலும், விபரங்கள் தேவைப்பட்டால் குருஜியை தொடர்பு கொள்ளவும். அல்லது கடிதம் எழுதவும். எல்லாவிதமான சந்தேகங்களுக்கும் விரிவான பதில் கிடைக்கும்.*

**ஸ்ரீ வைஸ்வாநரக்னி ஹோமமந்த்ரங்களின் முக்கிய சாரத்தை இங்கே கொடுக்கிறோம்.**

*இந்த ஹோமத்தில் அக்னி பகவானையும், வருண பகவானையும், ஸ்ரீ மகா கணபதி பகவானையும் இந்திரன், சோமன், ப்ரஹ்மா, ப்ருஹஸ்பதி ஆகிய தேவர்களையும் பிரார்த்தித்து அக்னி மூலமாக ஆஹுதிகள் கொடுக்கப் படுகின்றன.*

*- ஹே அக்நி பகவானே !*

*உங்களுக்கு கோபம் தரக்கூடிய செய்கைகளை செய்த பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீர்களாக.*

*ஜீவனத்திற்காக பொய் சொன்ன பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீராக.*

*யக்ஞங்களால் நேர்ந்த குறைபாடுகளால் ஏற்பட்ட பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீராக.*

*யக்ஞம் சம்பந்தப்படாத வேறு கர்மாக்களில் நேர்நத குறைபாடுகளால் ஏற்பட்ட பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீராக.*

*உறவினர்கள் மற்றும் நண்பர்களின் புகழ்ச்சியால் கர்வம் கொண்டு, தேவர்களுக்கு அபசாரங்கள் இழைத்த பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பாயாக.*

*உடலாலும், புலன்களாலும் இழைத்த பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பாயாக.*

*என்னைக் கடன்களிலிருந்து விடுவிப்பாயாக.*

*நான் கருவில் இருந்த காலத்தில், என் தாய்-தந்தையரால் இழைக்கப்பட்ட பாபங்களின் தாக்கத்திலிருந்து என்னை விடுவிப்பாயாக.*

*நான் அறியாப்பருவத்தில் என் தாய்-தந்தையருக்கு இழைத்த ஹிம்ஸைகளால் விளைந்த பாபங்களிலிருந்து என்னைக் கரையேற்றுவாயாக.*

*என் பெற்றோருக்கு மனக் கஷ்டங்கள் ஏற்படுத்திய பாபங்களிலிருந்து எனக்கு விடுதலை அளிப்பாயாக.*

*என் புத்திரன் முதலானாரோடு கூடி நான் இழைத்த அனைத்துப் பாபங்களிலிருந்தும் எனக்கு விமோசனம் அளிப்பாயாக.*

அறிஞர்கள் அவையில் நான் செய்திருக்கக்கூடிய பிழைகளால் நேர்ந்த பாபங்களை அகற்றி, என்னைப் புண்ணிய லோகம் சேர்ப்பாயாக.

தேவர்கள் கழுவி விட்ட பாபச்சுமை, என்னிடம் சார்ந்திருந்தால் அவற்றிலிருந்து என்னை விடுவிப்பாயாக.

எக்காலத்திலும் நான் செய்த பாபங்களிலிருந்து என்னைச் சுத்தம் செய்வாயாக.

இங்கு வந்து எனக்கு தீர்க்காயுள் அருள்வாயாக.

என் விரோதிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக.

உன்னை த்யாநிக்கின்றோம். எம்மைவிட்டு அகலாதீர்.

என் குழந்தைகளைக் காப்பாற்ற இயலாது, அவர்களுக்கு கடன்பட்டிருந்தால், கடனாக வாங்கிய முதலை சாப்பிட்டுவிட்டுத் திருப்பித்தர இயலாதனவாக இருந்திருந்தால், அவ்வாறு பட்ட கடன்களிலிருந்து அக்நியும், இந்த்ரனும் என்னை விடுவிக்கட்டும்.

நான் திருடியிருந்தால், பார்க்கத் தகாதவற்றைப் பார்த்திருந்தால் அத்தகைய பாபங்களிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக.

நான் திருப்பித் தராத கடன்கள், விளையாடும்போது வைத்துப் பந்தயத்தைக் கொடுக்காது விட்ட கடன்கள் போன்றவற்றிலிருந்து என்னை விடுவிப்பாயாக.

எங்கள், தலை, இடை, பாதம் ஆகிய இடங்களைச் சுற்றி இருக்கும் பாபத்தை அறுத்தெறிந்து, நாங்கள் பாபமற்றவர்களாகக் இருக்க செய்வாயாக.

சுருக்கமாக அல்லது விஸ்தாரமாக மற்றவர் மீது பழி சுமத்துதல், பிறரை ஹிம்ஸித்தல், கோள் சொல்லுதல் போன்ற யக்ஷ்மாதி ரோகங்களுக்குக் காரணமான பாபங்களை என்னிடமிருந்து அகற்றுவீர்களாக.

ரோகத்தை ஏற்படுத்தும் பாபங்களையும், அலக்ஷ்மீகரத்தையும் அகற்றிக் கொள்ள அருள்வீராக.

இந்த கர்மாவினால் நாங்கள் பாபங்கள் நீக்கப்பட்டவராய், மங்களங்கள் சேரப்பெற்றவராய், அழகுள்ளவராய் ஆக அருள்வீர். எங்களுக்கு நிறைந்த செல்வத்தை அருளி, கொஞ்ச நஞ்சமுள்ள பாபங்களையும் களைந்து, எங்களைப் புநிதனாக்குவீராக.

எங்கள் எதிரிகளை அகற்றும், எங்களுக்கு சுகங்களை அருளும்.

எங்களை, எங்கள் சத்ருக்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களாக்குவீராக.

எமது எதிரிகளை உமது ஸமித்து ஆக்கிக் கொள்வீராக.

எனக்குத் தீங்கு நினைக்கும், விளைவிக்கும், எதிரிகளைத் தீயிலிட்ட கட்டைகளாக்குவீராக.

என்னை வெறுக்கும், நான் வெறுக்கும், எதிரிகளைச் சாம்பலாக்குவீராக.

நான் கொடுத்த செல்வத்தைத் திருப்பாதவன், என் செயல்களுக்கு இடையூறு விளைவிப்பவன், என்னை நிந்திப்பவன். என்னைக் கொல்ல நினைப்பவன் ஆகிய நால்வகை எதிரிகளையும் அழித்திடுவீராக.

என்னைச் சார்ந்தவர்களது அழகு, பலம் போன்றவை மேன்மைஅடைய அருள்வீராக.

பாபச் செயல்களால் எனது மனது, ஆயுள், கண்கள், காது, ப்ராணன், சித்தம் முதலியன அழிமுகம் நோக்கி இருந்தன. இந்த பிராயச்சித்த ஹோமகர்மாவினால் பாபங்கள் களையப்பட்டு விட்டமையால் அவை மீண்டும் மேன்மையானவை ஆகட்டும். அனைத்து பாபங்களையும் அழிக்க வல்ல வைஸ்வாநரக்நியின் தயவால் பாபங்கள் நீங்கி தூய்மையான வாழ்வு வாழ்வேனாக.

நீயும் உன்னைச் சார்ந்தவர்களும், உன் கடாக்ஷமும், திரும்பப் திரும்ப என்னைச் சுற்றி வந்து, எனக்கு லக்ஷக்கணக்கான செல்வத்தைக் கொடுப்பதாக.

என்னிடம் முன்னால் இல்லாத செல்வத்தை சம்பாதித்துக் கொடுப்பாயாக.

பிறந்த உடனேயே நாம் தேவர்களுக்கு ப்ரதிக்ஞை செய்த கடன் (தேவருணம்) (யாகம் செய்தல்) ருஷிருணம் (என்பது வேத அத்யயநம் செய்தல்). பித்ருருணம் (தீர்க்க, நல்ல ப்ரஜையைப் பெற்று வளர்த்தல் வேண்டும்) ஆகிய இக்கடன்களிலிருந்து விடுபட அருளுமாறு ப்ரார்த்திக்கிறோம்.

மேற்கூறிய முக்கடன்களை தீர்க்குமளவுக்கு எங்கள் மனங்களைச் சுத்தப்டுத்தி மனச்சாந்தி அருளுமாறு ப்ரார்த்திக்கிறோம்.

புண்ய லோகத்தில் உள்ளவர்கள் ஸுஹ்ருதம் உள்ளவர்கள். சந்தோஷம் மிக்கவர்கள். ரோகமற்றவர்கள். பிறரால் வஞ்சிக்கப்படாதவர்கள். தங்கள் ஸந்ததியினரைப் பார்த்த வண்ணம் அருள் செய்பவர்கள். அத்தகையை புண்ய லோகம் எனக்குக் கிடைக்கட்டும்.

எந்தெந்த பாபத்திற்கு என்னென்ன ப்ராயச்சித்தம் என்பதை நீ அறிவாய். எனவே, உன்னை ப்ரார்த்திக்கிறேன். இப்பிறவியிலும், முற்பிறவியிலும் மனம் வாக்கு காயங்களால் நான் செய்துள்ள அனைத்துப் பாபங்களிலிருந்தும் என்னை விடுவிப்பாயாக.

மேலும் மாத்ரு சாபம், பித்ரு சாபம், குரு சாபம், குல தெய்வ சாபம், இஷ்ட தேவதா சாபம், கிரஹ தேவதா சாபம், கிராமதேவதா சாபம் இவையெல்லாம் நிவர்த்தியாகும் பொருட்டு இந்த ஹோமம் செய்யப்படுகிறது.

மேலும், நாம் தண்ணீர், பூமி, வாயு, அக்னி, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களுக்கு செய்த அபச்சாரங்களை இந்த ஹோமம் நிவர்த்தி செய்யும்.

நமக்கு வாழ்க்கையில் ஏற்படும் கண்டங்களை தாண்டி வரச் செய்யும். நமக்கு ஏற்பட்ட சாபங்கள் தான கண்டங்களை ஏற்படுத்துகின்றன. அதை தாண்டி வர இந்த ஹோமம் வழி வகுக்கிறது.

நமக்கு ஏற்படுகின்ற கிரக தோஷங்களையும், தெசா, புக்தி, அந்தர, பாதகங்களையும் நிவர்த்தி செய்யும்.

நமக்கு ஏற்படுகின்ற எல்லா தோஷங்களையும் நீக்கவல்லது. நமக்கு ஏற்படுகின்ற எல்லா திருஷ்டிகளையும் போக்கவல்லது.

இப்படிப்பட்ட அனைத்து பாபங்கள், சாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள் இந்த ஹோமபலனால் நிவர்த்தியாகும்.

மேலும், இந்த ஹோமமுடிவில், என்னுடைய சார்பில் அதாவது இந்த ஹோமத்தை நடத்துபவர், (புரோகிதர்) அக்னி பகவானை வேண்டும் மந்திரத்தின் அர்த்தமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**ஹே அக்நி பகவானே ! என் எஜமானனுக்கு தீர்க்காயுளும், பலமும் அளிப்பாயாக.**

**ஹே வருணனே ! எஜமானன் மீண்டும் நிறைந்த பலம் அடையச் செய்வாயாக.**

**ஹே அதிதி தேவதையே ! தாயைப் போல அவருக்கும் ஹிதம் அளிப்பாயாக.**

**ஹே விஸ்வே தேவர்களே ! அவர் முதுமைக் காலம் வரை வாழ அருள்வீராக.**

**ஹே எஜமான தம்பதிகளே ! அக்நியில் ஆஜ்ய ஆஹுதிகள் அளித்து கர்மானுஷ்டானங்களைத் தொடங்கியுள்ளீர்கள். இதைத் தொடருங்கள் ஒருவருக்கொருவர் இணை பிரியாதிருங்கள். உங்கள் கர்மானுஷ்டானங்கள் உங்கள் கோத்ரம் (குடும்பம்) முழுவதற்கும் பலனளிப்பதாக உள்ளதென்பதை மறவாதீர்கள்.**